மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05 ம் நாள் திங்கட்கிழமை

இ.மஎண்.06/2024
உள்
அசல் வழக்கு எண்.60/2019
––––––––

சு.சோலைச்சாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சு.சங்கரலிங்கம்
2. சு.சின்னபாலு
3. சோ.இந்திரகுமாரி (இறப்பு)
4. கு.சுப்பம்மாள்
5. பாப்பா (எ) கணபதி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
6. யு.ரேகா
7. சோ.மணிகண்டன்
8. செ.லதா
9. செ.ஜோதி குமார் ... உத்தேச எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
(9 ம் உத்தேச பிரதிவாதியின் தாயாரும்
பாதுகாவலருமான 8 ம் உத்தேச பிரதிவாதி மூலம்)

இந்த மனு 05.01.2024 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 23.01.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/6 முதல் 9 உத்தேச பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜேஸ் அவர்கள் ஆஜராகியும், 1, 4, 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், 2 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தோன்றா தரப்பினராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா பிராதை மனுவில் கண்டவாறு சீர்திருத்த செய்ய உத்தரவிடக்கோரி 05.01.2024ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

தாவா வழக்கானது பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக ஏற்பட்டிருந்தது. இதற்கிடையில் 3ம் பிரதிவாதி கடந்த 04.04.2023ம் தேதியன்று உடல்நலக்குறைவினால் வாதியையும், 6 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு மனுதாரர் கணவர் ஆவார். 6ம் உத்தேச பிரதிவாதி மகள் ஆவார். 7ம் உத்தேச பிரதிவாதி மகன் ஆவார். கடந்த 02.10.2020ம் தேதியன்று 3ம் பிரதிவாதியின் மகனான செந்தில்குமார் அவரது மனைவியான 8ம் உத்தேச பிரதிவாதியையும், மகனான 9ம் உத்தேச பிரதிவாதியையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். தாவா சொத்துக்களில் 6 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளுக்கு உரிமை மூலம் மற்றும் பாத்தியதை, அனுபவம் இருப்பதால் 6 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்ப்பதற்காக தாவா மனுவினை தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கானது அவசியமான கட்சிக்காரர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இந்திரக்குமாரியின் வாரிசுகளான 6 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளையும் வாதியையும் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாக இருந்த காரணத்தினால் மேற்படி நபர்களை கட்சிக்காரர்களாக சேர்க்க மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.03/2023 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவின் அடிப்படையில் 8, 9 உத்தேச பிரதிவாதிகள் தாவா வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) <u>6 முதல் 9 எதிர்மனுதாரர்/6 முதல் 9 உத்தேச பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>

இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவைகள் ஆகும். தாவா வழக்கில் 3ம் பிரதிவாதி இந்திராகுமாரி கடந்த 04.04.2023ம் தேதியன்று உடல்நலக்குறைவினால் இறந்துவிட்டார். அவரது வாரிசுகளான 6 முதல் 9 எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் உத்தேச பிரதிவாதிகளாக சேர்த்து மனு தாக்கல் செய்துள்ளார்கள். மேலும்,8ம் உத்தேச பிரதிவாதியான செ.லதா அவர்களின் கணவர் இறந்துவிட்டதால் 8ம் உத்தேச பிரதிவாதியையும் அவரது மைனர் மகனையும் தாவா மனுவில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்படி 3ம் பிரதிவாதி இறந்துவிட்டபடியால் அவருக்குள்ள பங்கு 6 முதல் 8 உத்தேச பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா உள்ளது. எனவே, மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்ய மனுவை அனுமதிக்குமாறு எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) <u>தீர்வு</u>:-

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் தாவா பிராதை மனுவில் கண்டவாறு சீர்திருத்த செய்ய உத்தரவிடக்கோரி 05.01.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மேலும்,

ஒரு வழக்கில் இறந்துபோன ஒருவருக்காக அவரது தரப்பில் அவரது வாரிசுகளையோ அல்லது தரப்பினர்களையோ கட்சியாக சேர்த்து வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும். இந்த வழக்கிலும் 6 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளை கட்சியாக சேர்க்கக்கோரி தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.03/2023 அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த மனுவினையும் அனுமதிக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, தாவா பிராதை மனுவில் கண்டவாறு சீர்திருத்த செய்ய உத்தரவிடக்கோரி 05.01.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

**உத்சே எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை**

P ANURADHA Digitally signed by P ANURADHA

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சாத்தூர்.**